<u>சார்பு நீதிமன்றம், பெருந்துறை</u>

**<u>OS.No.6 / 2009</u>**

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 11ம் நாள் DW2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் : 11.02.2026

**Dw2 (சுப்பிரமணியன்)**

**<u>குறுக்கு விசாரணை வாதி தரப்பு-</u>**

இவ்வழக்கின் 1ஆம் வாதி கிருஷ்ணசாமிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 6 குழந்தைகள். 6 பேர் ஆண் மக்கள், அவருக்கு ஒரு பெண் குழந்தை உள்ளது என்றால் சரிதான். அவர் பெயர் கோமதி என்றால் சரிதான். 1ஆம் வாதிக்கு ஒரு சகோதரர் அவர் பெயர் வெங்கடாச்சலம். தாவா சொத்தும் இன்னும் இதர சொத்துக்களும் 1ஆம் வாதிக்கும் அவரது சகோதரர் வெங்கடாச்சலத்துக்கும் பிதுராஜித வகையில் பாத்தியம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வழக்குரையில் பூர்வீக சொத்துக்களை வெங்கடாச்சலம் மற்றும் 1ஆம் வாதி பிரித்துக் கொண்டார்கள் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். பூர்வீக சொத்துக்கள் என்பதால் 1ஆம் வாதியின் மகள் கோமதிக்கு பிறப்பின் அடிப்படையில் சொத்தில் பாத்தியம் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கோமதி வழக்கு சொத்துக்கள் பொறுத்தோ இதர சொத்துக்கள் பொறுத்தோ நாளது தேதி வரையில் பாக பாத்திய விடுதலை யாவும் ஏற்படுத்திக் கொடுக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ஆம் வாதியின் மக்கள் நாளது தேதி வரை எழுத்து மூலமாகவோ வாய்மொழியாகவோ பாகப்பிரிவினை செய்து கொள்ளவில்லை என்றால் அது பற்றி தெரியாது. சாட்சி முன்வந்து கோமதி என்பவர் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றும் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றும் கூறுகிறார். கோமதி தாக்கல் செய்த வழக்கு முழு விசாரணைக்கு பின்பு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதா அல்லது வருகையின்மையின் காரணமாக தள்ளுபடி செய்யப்பட்டதா என்றால் அவர் வருகையின்மையினால் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதாக பி.வா.சா.ஆ.12ல் கண்டுள்ளது என்றால் சரிதான். கோமதிக்கு தாவா சொத்திலும் இதர சொத்துக்களிலும் பாகம் உள்ளது என்றும் அவர் நாளது தேதி வரை தாவா சொத்தில் கூட்டு அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. 1ஆம்

பிரதிவாதி பெயரில் உள்ள பொது அதிகார ஆவணத்தில் கோமதி தரப்பினர் அல்ல. 1 ஆம் பிரதிவாதி 2,3 பிரதிவாதிகளுக்கு ஏற்படுத்திய கிரய ஆவணத்திலும் கோமதி தரப்பினர் அல்ல என்றால் சரிதான். தரப்பினர் அல்லாத ஆவணம் அந்த தரப்பினரை கட்டுப்படுத்தாது என்றால் சரிதான். எனக்கும் ரவிச்சந்திரனுக்கும் விரோதம் இல்லை. 1 ஆம் பிரதிவாதி வழக்கில் தாக்கல் செய்துள்ள எதிர்வாதம் சரியானதா என்றால் சரியானதல்ல. ரவிச்சந்திரன் என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. நான் அதை படித்து பார்க்கவில்லை. ரவிச்சந்திரன் இவ்வழக்கில் சாட்சியம் அளித்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. அவர் அளீத்துள்ள சாட்சியம் தவறானது. நான் படித்து பார்க்கவில்லை. குடும்ப பாகபிரிவினையில் எ செட்டியூல் சொத்து 1 ஆம் வாதிக்கும் பி செட்டியூல் சொத்து வெங்கடாச்சலத்துக்கும் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். எ செட்டியூல் சொத்தின் ஒரு பகுதி தான் தாவா சொத்து என்றால் சரிதான். தாவா சொத்து குன்னத்தூர் - பெருந்துறை நெடுஞ்சாலை ஒட்டி தென்புறமாக அமைந்துள்ளது என்றால் சரியல்ல. சுமார் அரை கி.மீ தூரம் உள்ளே தள்ளி அமைந்துள்ளது. 1 ஆம் பிரதிவாதி வாதிகளின் உறவினர். ரவிச்சந்திரன் எனக்கு 1996 ஆம் ஆண்டு முதல் தெரியும். எனக்கு போர்வெல் தொழில். நான் பைனான்ஸ் தொழில் செய்கிறேன் என்றால் சரியல்ல. நான் 2 ஆம் பிரதிவாதி சீரங்கசாமியின் அக்கா மகன் . நான் சீரங்கசாமியை விசாரிக்கப்போவதில்லை. 3 ஆம் வாதி சண்முகசுந்தரம் எனக்கு பழக்கமில்லை ஆனால் நான் அவரை பார்த்துள்ளேன். 1 ஆம் பிரதிவாதி பெயரில் உள்ள பொது அதிகார ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேன். வாதிகள் ஏற்படுத்திய பொது அதிகார ஆவணத்தில் சொத்தின் சுவாதீனம் 1 ஆம் பிரதிவாதிக்கு ஒப்படைத்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. பொது அதிகார ஆவணத்தின் அசல் என்னிடம் உள்ளதா என்றால் நகல் உள்ளது அசல் ஆவணத்தை வங்கியில் கடனிற்காக ஒப்படைத்துள்ளேன். நான் சொல்வது போல் பொது அதிகார ஆவணத்தில் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டதாக சொல்லப்படவில்லை என்றும் நான் வழக்கிற்காக சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஒரு போதும் 1 ஆம் பிரதிவாதி சொத்தை அனுபவிக்கவில்லை என்றால் சரிதான். சாட்சி மீண்டும் 1 ஆம் பிரதிவாதி அனுபவித்து வந்ததை தனக்கு கொடுத்ததாக கூறுகிறார். அவர் பெயரில் பட்டா இருந்ததா என்றால் எனக்கு ஞாபகமில்லை. அ.வ.எண்.5/2009 நான் பிரதிவாதி , நான் கடந்த 25.08.2025 ல் சாட்சியம் அளித்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கு குறுக்கு விசாரணையில் நான் 1 ஆம் வாதியின் குடும்பத்தாரிடையே எழுத்துப்பூர்வ பாகப்பிரிவினை இல்லை என்றால் சரிதான், 1 ஆம் பிரதிவாதியின் மகளுக்கு பிறப்பின் அடிப்படையில் பாகம் என்பதை மறுக்கவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால்

சரிதான். இந்த வழக்கின் 1 ஆம் பிரதிவாதி ரவிச்சந்திரன் அ.வ.எண்.5/2009 வழக்கில் 2 ஆம் பிரதிவாதி என்றால் சரிதான். வாதி குடும்பத்தினர் வெளிநாடோ வெளியூரோ செல்லும் நபர்கள் அல்ல என்றும் அவர்கன் நிரந்தரமாக பெருந்துறையில் வசிக்கும் நபர்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதிகள் 1 ஆம் பிரதிவாதிக்கு பொது அதிகார ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் பணத்தேவை இருந்ததால் பொது அதிகார ஆவணம் ஏற்படுத்தியதாக கூறுகிறார். வாதிகளுக்கு பணத்தேவை ஏற்பட்டு ரவிச்சந்திரனிடம் பணம் பெற்று அந்த கடனிற்கு ஆதரவாக ரவிச்சந்திரன் பொது அதிகார ஆவணம் பெற்றுக் கொண்டாரா என்றால் ஆமாம். கிரய தொகை முழுவதையும் ரவிச்சந்திரன் வாதிகளுக்கு செலுத்தி விட்டார். ரவிச்சந்திரன் கிரய தொகை முழுவதையும் வாதிகளுக்கு கொடுத்துவிட்டதால் அவர் சொத்தின் உரிமையாளர் ஆகிவிட்டாரா என்றால் ஆமாம். அ.வ.5/2009 குறுக்கு விசாரணையில் ரவிச்சந்திரனுக்கு கிரயம் ஏற்படுத்தியதாகவும் அவர்களிடமிருந்து தான் கிரயம் பெற்றதாகவும் சாட்சியம் அளித்துள்ளதாக எனது குறுக்கு விசாரணையில் கண்டுள்ளது என்றால் சரிதான். அதே போல் ரவிச்சந்திரன் பணம் கொடுத்து கிரயம் பெற்றாரா அல்லது பெயரளவில் கிரயம் பெற்றாரா என்று தெரியாது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ரவிச்சந்திரன் பெயரில் உள்ள கிரய பத்திரத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன் என சாட்சியத்தில் உள்ளது என்றால் சரிதான். ரவிச்சந்திரன் சுவாதீனத்தில் உள்ளார் என்பதற்கான ஆவணங்கள் உள்ளதா என்றால் எனக்கு ஞாபகமில்லை. ரவிச்சந்திரன் கிரய பத்திரம் உள்ளதா என்றால் கிரய பத்திர நகல் உள்ளது. ரவிச்சந்திரன் சுவாதீனம் கொடுத்ததாக உள்ள நிலையில் வாதிகளால் எனக்கு நேரடியாக சுவாதீனம் கொடுக்கப்படவில்லை என்றால் சாட்சி சுவாதீனம் ரவிச்சந்திரனுக்கு கொடுத்து ரவிச்சந்திரன் தனக்கு கொடுத்ததாக சொல்கிறார். இதே நீதிமன்றத்தில் ரவிச்சந்திரன் வாதியிடமிருந்து சுவாதீனம் பெறவில்லை என்றும் எனக்கு சுவாதீனம் கொடுக்கவில்லை என்று சாட்சியம் அளித்துள்ளார் என்றால் எனக்கு அது பற்றி ஞாபகமில்லை. எனது பெயரிலும் சீரங்கசாமி பெயரிலும் ஏற்பட்ட கிரயம் அரசு வழிகாட்டு மதிப்பீடு அடிப்படையில் ஏற்பட்டது என்றால் சந்தை மதிப்பீட்டில் ஏற்பட்டது. பொதுவாக சந்தை மதிப்பு அதிகாமாகவும் வழிகாட்டு மதிப்பு குறைவாக இருக்கும் என்றால் சரிதான். அ.வ.5/2009 வழக்கில் கிரயத்தின் மதிப்பு அரசு வழிகாட்டுதலின் அடிப்படையில் எழுதப்பட்டது என்றால் சரிதான் என சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். ரவிச்சந்திரன் வாதிகளுக்கு எவ்வளவு பணம் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. ரவிச்சந்திரனுக்கும் வாதிகளுக்கும் பொது அதிகார ஆவணத்தின் முன்பாக என்ன உடன்பாடு என எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பொது அதிகார

ஆவணம் ஏற்பட்ட போது நான் உடனில்லை. அ.வ.5/2009 வழக்கில் ரவிச்சந்திரன் பெயரில் ஏற்பட்ட பொது அதிகார ஆவணம் கடனிற்காக ஏற்பட்ட ஆவணமா என்றால் தெரியாது என சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். சாட்சி முன்வந்து அது கடனிற்காக ஏற்பட்ட ஆவணம் தான் என்று பதிலளிக்கிறார். பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் எனக்கு சுவாதீனம் கொடுக்கப்படவில்லை என்றால் எனக்கு தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். எனது வருமான வரி கணக்கில் எனது இரண்டு கிரயங்களையும் காண்பித்துள்ளேன். அந்த வருமான வரி கணக்கை என்னால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய இயலும். கிரயத்திற்கு முன்பு அசல் ஆவணங்களை பாத்தேனா என்றால் பார்த்தேன். என்ன ஆவணங்களை பார்த்தேன் என்றால் ரவிச்சந்திரன் பெயரில் உள்ள பொது அதிகார ஆவணம், ரவிச்சந்திரன் சீரங்கசாமியுடன் செய்து கொண்ட ஒப்பந்தம் ஆகியவற்றை பார்த்தேன். சீரங்கசாமி ரவிச்சந்திரனிடம் செய்து கொண்ட கிரய ஒப்பந்தத்தில் என்ன தொகை கண்டு எழுதப்பட்டது என்றால் எனக்கு ஞாபகமில்லை. பொது அதிகார முகவர் தான் கிரய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொடுத்தார். சீரங்கசாமி ரவிச்சந்திரனுடன் ஏற்படுத்திக் கொண்ட கிரய ஒப்பந்தம் கடனிற்காக ஏற்பட்டது என்றால் சரியல்ல கிரயத்திற்காக ஏற்படுத்தப்பட்டது. அந்த ஒப்பந்தத்தின் போது நான் உடனில்லை. அவர்களுக்கிடையே என்ன பேசிக்கொண்டார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது ஆவணங்களின் அடிப்படையில் தெரிந்து கொண்டேன். கிரய ஒப்பந்தத்தில் முன் தொகை எவ்வளவு பாக்கி கிரய தொகை எவ்வளவு என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 கிரய ஒப்பந்தத்தில் கண்டுள்ள முன் பணம் 2 ஆம் பிரதிவாதி கிரயத்தில் கழித்து கொண்டாரா என்றால் எனக்கு அது பற்றி ஞாபகமில்லை. கோமதி தன் சகோதரர் மற்றும் தகப்பனாருடன் பாகப்பிரிவினை செய்து கொள்ளவில்லை என்பதால் அது பாகம் பிரியாத சொத்துக்களாக தான் கருதப்பட வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பொது அதிகார தேதியில் தாவா சொத்து எவ்வாறு இருந்தது என்றால் காலியாக தான் இருந்தது. பொது அதிகார தேதியில் சொத்தின் அமைப்பை நான் பார்க்கவில்லை. தாவா சொத்து குன்னத்தூர் சாலையிலிருந்து அரை கி.மீ தூரத்தில் உள்ளது. சொத்தை கிரயம் பெற்ற போது சொத்தை சர்வேயர் உதவியுடன் அளந்து பார்த்தேனா என்றால் இல்லை டேப் வைத்து அளக்கப்பட்டது. பொது அதிகார ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள செக்குப்பந்திகளை என்னால் சொல்ல முடியும். குன்னத்தூர் சாலையிலிருந்து கிரயம் பெற்ற சொத்திற்கு செல்வதற்கு தடம் எதுவும் ஆவணத்தில் காட்டப்படவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்டார் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு அருகில் 20 அடி

அகல தென்வடல் பொதுப்பாதை என்று கிடையாது என்றால் சரியல்ல. அது உள்ளது. பொது அதிகார ஆவணம் கிரயம் ஆவணத்தில் உள்ள பாதை ஆணையர் குறிப்பிட்டுள்ள பாதைக்கு விரோதமாக உள்ளது என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் சரியா தவறா என்றால் தவறு. பத்திரத்தில் சொல்லியுள்ளவாறு தடம் அறிக்கையில் சொல்லப்படாததால் தவறு என சொல்கிறேன் என்றால் ஆமாம். 1 ஆம் பிரதிவாதி சீரங்கசாமிக்கு ஏற்படுத்தி கொடுத்ததும் எனக்கு கிரயம் ஏற்படுத்தி கொடுத்ததும் வாதிகளுக்கு தெரியாது என்றால் சரியல்ல. தெரியும் என்று ரவிச்சந்திரன் சொன்னார். நான் கிரயத்திற்கு செலுத்திய தொகை வாதிகளுக்கு சேரவில்லை என்றால் நான் ரவிச்சந்திரனுக்கு கொடுத்து விட்டேன் அவர் கொடுத்து விட்டதாக சொன்னார். நான் 1 ஆம் பிரதிவாதிக்கு கிரயத்திற்கு பணம் கொடுக்கவில்லை என்றும் ரவிச்சந்திரன் பொது அதிகார ஆவணத்திற்கு முன்பும் கிரயத்திற்கு பின்பும் வாதிகளுக்கு பணம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. ரவிச்சந்திரன், நான் மற்றும் சீரங்கசாமி கூட்டாக நிதிநிறுவனம் நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. பொது அதிகார ஆவணத்தில் ரவிச்சந்திரன் வாதிகளுக்கு பணம் கொடுத்து பொது அதிகார ஆவணம் பெற்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2,3 பிரதிவாதிகளுக்கு 1 ஆம் பிரதிவாதி எழுதி கொடுத்த கிரய பத்திரமானது பி.வா.சா.ஆ.3 கிரய உடன்படிக்கை அடிப்படையில் தான் எழுதி கொடுக்கப்பட்டதா என்றால் ஆமாம். நானும் 2 ஆம் பிரதிவாதியும் பெற்ற கிரய ஆவணத்தில் கிரய ஒப்பந்தம் பற்றி சொல்லப்பட்டுள்ளதா என்றால் எனக்கு ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.5 கிரயத்திற்கு 2 ஆம் பிரதிவாதி உறவினர் என்பதால் பணப்பரிமாற்றம் இல்லை என்றால் சரியல்ல. நான் 2 ஆம் பிரதிவாதியிடமிருந்து கிரயத்திற்கு கிரயம் பேசியது பணப்பரிமாற்றம் ஆவணம் பதிவு செய்யப்பட்டது அனைத்தும் ஒரே தேதியில் நடந்ததா என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ.5 ல் 09.12.2002 ல் எழுதப்பட்டு அடுத்த நாள் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொது அதிகார ஆவணம் கிரய ஆவணங்களும் ஆகியவை நடைமுறைப்படுத்தப்படாத ஆவணங்கள் என்பதால் நான் முன்னுக்கு புறனாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 கிரயம் நடைமுறைக்கு வந்து விட்டதாக போலியாக காட்டுவதற்காக பி.வா.சா.ஆ.6 மற்றும் 7 ஆவணத்தில் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.8 வழக்கு ஏற்பட்ட முடிவு முழு விசாரணைக்கு பின்பு ஏற்படவில்லை என்பதால் அது கோமதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து மற்றும் இதர சொத்துக்களிலும் கோமதி இன்றைய தேதி வரை கூட்டு சுவாதீனத்தில் உள்ளார் என்றால் சரியல்ல. 1 ஆம் வாதியின் மகன்கள் அனைவரும் சட்ட வயதை அடைந்தவர்கள் என்றால் சரிதான். 1 ஆம் வாதியின் மகன்கள் பொது அதிகார

ஆவணம் மற்றும் கிரயத்தில் தரப்பினர்களாக இல்லை என்பதால் அவர்களின் ஆண் பெண் மக்களுக்கும் பிறப்பில் அடிப்படையில் தாவா சொத்து பாகம் உள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.9 , 10 , 11, 12 ,13,14,15 வரை உள்ள தீர்ப்புகள் முழுமையாக விசாரிக்கப்படாமல் தீர்ப்பளிக்கப்பட்டதால் அந்தந்த வழக்கில் உள்ள வாதிகளை இந்த வழக்கில் தாவா சொத்தின் உரிமையை இழக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.16,17,18 பட்டா 62 நபர்கள் பெயரில் ஏற்பட்ட கூட்டு பட்டா என்றால் சரிதான். கூட்டு பட்டாவில் வாதிகள் பெயரும் உள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.19,20 வரி ரசீது தாவாவிற்கு பின்பு ஏற்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.21 வரைபடம் பஞ்சாயத்தில் அங்கீகரிப்பட்ட வரைபடம் அல்ல என்றால் சரிதான். அது பொறியாளர் தயார் செய்த வரைபடம். பி.வா.சா.ஆ.21 வரைபடம் தாவாவிற்கு பின்பு ஏற்பட்டது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.22 வழக்கிற்கு சம்மந்தமில்லாத ஆவணம் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.22-ல் சொல்லப்பட்டுள்ள பட்டாவை நான் முன்னிலைப்படுத்தவில்லை. பி.வா.சா.ஆ.23,24,25,26,27 வழக்கிற்கு பின்னிட்ட ரசீதுகள் என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் வழக்கிற்கு பின்னிட்டு வழக்கை திசை திருப்புவதற்காக என்னால் ஏற்படுத்தப்பட்ட போலியான ஆவணங்கள் என்றால் சரியல்ல. 3 ஆம் வாதி சண்முகசுந்தரம் நாங்கள் 1 முதல் 3 பிரதிவாதிகள் கூட்டாக நடத்தி வரும் நிதிநிறுவனத்தில் ரூ.2,00,000/- 15.08.1998 ல் கடனாக பெற்றார் என்றும் அதற்கு ஆதரவாக வாதிகளை வற்புறுத்தி 17.08.1998 ல் 1 ஆம் பிரதிவாதி பெயரில் பொது அதிகார ஆவணம் மற்றும் பூர்த்தி செய்யப்படாத வெற்றுத்தாள்கள் மற்றும் பச்சை தாள்களில் கையொப்பம் பெற்றுக்கொண்டோம் என்றால் சரியல்ல. மேற்படி கடனிற்கு 36 சதவீதம் வட்டி பெற்றோம் என்றால் சரியல்ல. பெற்ற கடனை வட்டியுடன் திரும்ப செலுத்தி விட்டார்கள் என்றால் சரியல்ல. அபராத வட்டி மற்றும் கூட்டு வட்டி கேட்டு பொது அதிகார ஆவணத்தை ரத்து செய்யவில்லை. தாவா சொத்தை அபகரிப்பதற்காக பொது அதிகார ஆவணத்தை தவறாக பயன்படுத்தி செல்லாத கிரய ஆவணங்களை பெற்றுக்கொண்டோம் என்றால் சரியல்ல. 2 மற்றும் 3 ஆம் பிரதிவாதி பெயரில் உள்ள கிரய பத்திரங்கள் செல்லாதவை மற்றும் அமலுக்கு வராத ஆவணங்கள் என்றால் சரியல்ல. ஏக்கர் 1.80 குடும்ப சொத்திற்கு நடுவில் தான் தாவா சொத்து உள்ளது என்றால் தெற்கோட்டில் சற்று முன்னதாக உள்ளது. வாதிகளின் பிற சொத்துக்களின் வழியாக தான் தாவா சொத்திற்கு செல்ல முடியும் என்றால் 20 அடி பொது தடத்தில் செல்ல வேண்டும். 20 அடி பொது தடம் தென்வடல் தடம். அது ஆவணத்தில் உள்ளது. குன்னத்தூர் சாலையிலிருந்து தாவா சொத்திற்கு செல்ல வேண்டுமென்றால் சாலையின் தெற்கே செல்ல வேண்டுமென்றால் சரிதான். எனது கிரய பத்திரத்தில் செக்குபந்தியில்

கண்டுள்ளவாறு பூஸ்துதியில் சொத்து இல்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் தடம் எதுவும் இல்லை என்றும் அவ்வாறு தடம் இருந்திருந்தால் ஆணையர் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருப்பார் என்றால் சரியல்ல. நான் கிரயம் பெற்ற விவரம் வாதிகளுக்கு தெரியாது என்றால் சரியல்ல. எனது கிரய ஆவணம் மறுபயன் இல்லாதது, சுவாதீனம் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் அனைத்து உரிமையாளரிடமிருந்தும் பொது அதிகார ஆவணம் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிகள் தான் சுவாதீனத்தில் உள்ளனர் என்றும் நாங்கள் சுவாதீனத்தில் இல்லை என்றும் எங்கள் கிரயம் செல்லாது என்றும் வாதிகள் கோரும் பரிகாரம் அவர்களுக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. கிரய காலத்தில் நான் கிரயம் பெற்ற சொத்தின் மதிப்பு ரூ.50 லட்சத்திற்கு மேல் மதிப்பு பெறும் என்றால் சரியல்ல. நான் கிரயத்திற்கு முன்பாக கிரய ஒப்பந்தம் ஏதும் செய்தேனா என்றால் இல்லை. அ.வ.எண்.5/2009 வழக்கில் நான் பொது அதிகார முகவருடன் ஒப்பந்தம் செய்தேன் நான் எவ்வளவு மதிப்பிற்கு ஒப்பந்தம் செய்தேன் என்று எனக்கு ஞாபகமில்லை என்றும் அந்த ஒப்பந்த பத்திரம் தாக்கல் செய்யவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது கிரயத்திற்கு முன்பு நான் வில்லங்கம் போட்டு பார்த்தேன். 06.07.1998 ல் இந்த தாவா சொத்தை உட்படுத்தி அ.வ.5/2009 வழக்கின் வாதியும் இந்த வழக்கின் 4 ஆம் பிரதிவாதியும் ஒரு பதிவு செய்யப்பட்ட கிரய ஒப்பந்த பத்திரத்தை ஏற்படுத்தி மேற்படி ஒப்பந்தத்தை 04.01.1999 கால நீடிப்பு செய்தும் பத்திரம் எழுதியுள்ளார்கள் என்பதை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொண்டேன். நான் வில்லங்கம் உள்ளதை தெரிந்து கொண்டேன். வில்லங்கம் உள்ள சொத்தை கிரயம் செய்யக்கூடாது என்று தெரியுமா என்றால் தெரியும். இவ்வழக்கின் 4 ஆம் பிரதிவாதி அவரது சகோதரர் தகப்பனார் ஆகியோரிடையே பொதுவில் உள்ளதாக அ.வ.5/2009 ல் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் ஏக்கர் 1.80 பொதுவில் இருந்ததை தான் நான் கூறுகிறேன். எனது எதிர் வழக்குரையில் தாவா சொத்தின் மதிப்பு ரூ.30 லட்சம் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் என சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரிதான். சொத்தை அபகரிக்க போலி ஆவணங்கள் தயார் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED — Digitally signed by M ASHFAQ AHAMED Date: 2026.02.11 18:34:22 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS